திண்டுக்கல் மாவட்டத்தில் - ரூ. 8.45 கோடி மதிப்பில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களைத் திறந்து வைத்தார்!

மாணவ-மாணவியர் உயர்ந்த இலட்சியத்துடன் கல்வி பயில வேண்டும்!

உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!

திண்டுக்கல், ஜூலை 20- உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.8.45 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டடங்களை குத்துவிளக்கேற்றி பயன்பாட்டிற்கு திறந்து வைத்துப் பேசுகையில், "மாணவ, மாணவிகள் வானளாவிய எண்ணங்களுடன், உயர்ந்த லட்சியத்துடன் கல்வி பயில வேண்டும்" எனத் தெரிவித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை, தலைமைச் செயலகத்திலிருந்து நேற்று (19.07.2024) பள்ளிக் கல்வித் துறை சார்பில் 264 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 956 புதிய வகுப்பறைக் கட்டடங்கள், 12 ஆய்வகக் கட்டடங்கள், தகை சால் பள்ளிகளில் புனரமைக்கப்பட்ட பள்ளிக் கட்டடங்களை திறந்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், கொக்கரக்கல்வலசு அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில் திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.8.45 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய வகுப்பறை கட்டடங்களை மாணாக்கர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவந்தார்.

இந்த விழாவில், அமைச்சர் சக்கரபாணி தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, அந்த திட்டங்களின் பயன்கள் அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடையும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள். மாணவர்களுக்கென பல்வேறு திட்டங்களை வகுத்து அதனைச் சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள், பள்ளிக் கல்வித் துறை சார்பில் ரூ.264.15 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 956 புதிய வகுப்பறைக் கட்டடங்கள், 12 ஆய்வகக் கட்டடங்கள், தகைசால் பள்ளிகளில் புனரமைக்கப்பட்ட பள்ளிக் கட்டடங்களை, சென்னை, தலைமைச் செயலகத்திலிருந்து இன்று (19.07.2024) திறந்து வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, திண்டுக்கல் மாவட்டத்தில், ஒட்டன்சத்திரம் கே.ஆர். அரசு மேல்நிலைப்பள்ளி தலா 6 வகுப்பறைகள் கொண்டு இரண்டு கட்டடங்கள் மற்றும் நாகையன் கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளி, கே.அணைப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தலா 6 வகுப்பறைகள் கொண்ட கட்டடங்கள் ஆகியவை தலா ரூ.1.28 கோடி மதிப்பீட்டிலும், அழகாபுரி அரசு மேல்நிலைப்பள்ளியில் 2 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் ரூ.42.72 இலட்சம் மதிப்பீட்டிலும், விராலிப்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில் 7 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் ரூ.1.84 கோடி மதிப்பீட்டிலும், கொக்கரக்கல்வலசு அரசு மேல்நிலைப்பள்ளியில் 5 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் ரூ.1.05 கோடி மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூ.8.45 கோடி மதிப்பீட்டிலான வகுப்பறை கட்டடங்கள் நபார்டு திட்டத்தில் கட்டப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

அனைத்து மாணவர்களும் எந்த காரணத்தைக் கொண்டும் கல்வியில் இடைநிற்றல் கூடாது என்பதில் தமிழக அரசு மிக கவனமாக செயல்பட்டு வருகிறது. மாணவ, மாணவிகள் பசியின்றி கல்வி கற்றிட வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள், தமிழகத்தில் அரசு தொடக்கப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். இத்திட்டம் மூலம் 31,008 அரசு தொடக்கப்பள்ளிகளில் பயிலும் 18.50 இலட்சம் மாணவ, மாணவிகள் பயனடைகின்றனர். இத்திட்டம் தற்போது, அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அதையடுத்து தமிழகம் முழுவதும் காலை உணவு திட்டத்தின் மூலம் மொத்தம் 20.73 இலட்சம் மாணவ, மாணவிகள் பயன் பெறுகின்றனர்.

தமிழ்நாட்டில் அனைத்துத் தரப்பினரும் போற்றும் வகையில் நல்லாட்சி நடத்தி வரும் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், தொடங்கப்பட்ட நாள் முதல், மிகச் சிறப்பாகச்

செயல்படுத்தப்பட்டு, நல்ல பயன் அளித்து வருகிறது. இதன்மூலம் அரசுப் பள்ளிகளில் மாணவ, மாணவிகள் சேர்க்கை அதிகரித்துள்ளதுடன், மாணவ, மாணவிகள் பசியின்றி கல்வி பயில வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறப்பு வாய்ந்த முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தமிழ்நாட்டு மக்களிடையே மட்டுமின்றி, பிற மாநிலம், வெளிநாட்டு மக்களிடையேயும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. மாணவ, மாணவிகள் வானளாவிய எண்ணங்களுடன், உயர்ந்த லட்சியத்துடன் கல்வி பயில வேண்டும்.

அரசு பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து, உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு "புதுமைப்பெண்" திட்டத்தில் மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தினை விரிவுபடுத்தி மாணவர்களும் பயன்பெறும் வகையில் "தமிழ்ப் புதல்வன்" திட்டம் நடப்பு கல்வியாண்டு முதல் செயல்படுத்தப்படவுள்ளது.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, 1.14 கோடி பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 1.48 இலட்சம் நபர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தகுதியுள்ள நபர்கள் அனைவருக்கும் கலைஞர் உரிமைத் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெண்கள் நகர பேருந்துகளில் சென்றால் கட்டணமில்லா சலுகை வழங்கப்பட்டு வருகிறது. சுமார் 7 ஆயிரம் புதிய பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டினை குடிசை இல்லா மாநிலமாக உருவாக்க கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 8 இலட்சம் வீடுகள் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில் முதற்கட்டமாக ஒரு இலட்சம் வீடுகள் தலா ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி வழங்கப்படவுள்ளது. மேலும், பழுதடைந்த வீடுகளை பராமரிக்க ரூ.2,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 2009 நியாய விலைக்கடைகள் பிரிக்கப்பட்டு புதியதாக முழுநேரம் மற்றும் பகுதி நேரம் நியாய விலைக்கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதில் திண்டுக்கல் மாவட்டத்தில் 230 கடைகள் பிரிக்கப்பட்டுள்ளன. ஒட்டன்சத்திரம் தொகுதியில் மட்டும் 70 நியாயவிலைக்கடைகள் பிரிக்கப்பட்டு புதிய நியாய விலைக்கடைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்தவர்களில், தகுதியுள்ளவர்களுக்கு 15 நாட்களில் குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் தமிழ்நாட்டில் 16 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், நியாய விலைக்கடை களில் கைரேகை பதிவு மூலம் பதிவுகள் மேற்கொள்வதில் ஏற்படும் சிரமங்களை தவிர்க்க கண் கருவிழி பதிவுகள் மேற்கொள்ள 36,000 நியாய விலைக் கடைகளிலும் கண் கருவிழி பதிவு கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 10,000 கி.மீட்டர் நீளம் சாலைகள் ரூ.4,000 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டிலும் 10,000 கி.மீட்டர் நீளம் சாலைகளை மேம்படுத்த ரூ.4,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஊரகப் பகுதிகளில் உள்ள சாலைகளில் 2000 கி.மீட்டர் நீளம் சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளன. அதில் திண்டுக்கல் மாவட்டத்தில் 200 கி.மீட்டர் நீளம் சாலைகள் மேம்படுத்த அனுமதி பெறப்பட்டுள்ளது,

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் நாசருதீன், ஒட்டன்சத்திரம் நகராட்சி தலைவர் திருமலைச்சாமி, நகராட்சி ஆணையாளர் ஆறு முகம், நகர்மன்றஉறுப்பினர்கண்ணன், உதவிப்பொறியாளர்கள் ராஜமோகன், சுப்பிர மணி, ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

வேலூர் மக்களவை உறுப்பினராக இரண்டாவது முறையாக தேர்ந்தெடுத்தமைக்காக குடியாத்தம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சத்தியானந்தம் தலைமையில் புட்டவாரிப்பல்லி, பரதராமி, டி.பி.பாளையம், வி.பி.பாளையம், வரதரெட்டிபல்லி, வீரிசெட்டிப்பல்லி, கல்லப்பாடி, தாட்டிமாணப்பல்லி, ராமாலை, கொண்ட சமுத்திரம் பகுதியில் வாக்காளர்களை, கழக தொண்டர்களையும், கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாநில தலைவர், வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் நேரில் சந்தித்து நன்றிகளை தெரிவித்துக்கொண்டார். உடன் துரைசிங்காரம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக

சென்னை மெட்ரோ ரெயில் பணிகள் நடைபெறும் இடங்களில் மாற்று வழியில் வடிகால் பணிகள்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

சென்னை, ஜூலை 20

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் மண்டலம், ஓட்டேரி போக் குவரத்து சந்திப்பு மற்றும் செம்பியம் பகுதிகளில் சென்னை மெட்ரோ இரயில் பணிகள் நடைபெறும் காரணத்தினால், வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மாற்று வழியில் மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (19.07.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, அரசு முதன்மைச் செயலாளர் / சென்னை மெட்ரோ இரயில் நிறுவன மேலாண்மை இயக்குநர் எம்.ஏ.சித்திக், மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி எம்.தாவூத் பீ, திருமதி பி. அமுதா, திருமதி சி. ஸ்ரீதனி, மண்டல அலுவலர் முருகன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

பின்னர் செய்தியாளர் சந்திப்பில், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசானது பேரிடர் காலங்களிலும், பருவமழையின்போது ஏற்படுகின்ற இயற்கை சீற்றத்தை சமாளிப்பதற்கு முன்கூட்டியே திட்டமிடல் அடிப்படையில் கடந்த 3 ஆண்டுகளாக தொடர்ந்து செயல்படுத்தி வருவதன் காரணத்தினால், பருவமழை காலங்களில் தண்ணீர் தேக்கம் குறைந்து வருகிறது.

அந்த வகையில், மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பில் பல இடங்களில் இரயில் நிலையப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறு பணிகள் மேற்கொள்ளப்படும் போது புதிய இரயில் பாதை அமைத்தல், இரயில் நிலையம் அமைக்கும் பணிகள் எங்கெல்லாம் வருகின்றதோ, அங்கெல்லாம் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு, அவ்விடங்களில் மழைநீர் வடிகால் பணிகள் வருகிறது என்றால், அதற்கு மாற்று ஏற்பாடாக நடைபெறும் பணிகளை குறுகிய காலத்திற்குள் முடித்திட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளதன் அதனடிப்படையில் மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பில் மேற்கொள்ளப்படும் மழைநீர் வடிகால் பணிகள் இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஓட்டேரி கால்வாய் அமைந்துள்ள இடங்களில் மெட்ரோ இரயில் நிறுவனம் மூலமாக குறிப்பிட்ட 250 மீட்டருக்கு பழைய கால்வாய் இடத்தில் பாதை அமைக்க வேண்டியுள்ளது. இதற்கு மாற்று ஏற்பாடாக 2 மீ. விட்டம் கொண்ட கான்கிரீட் குழாயும், இதனை இணைக்கும் வகையில் மழைநீர் வடிகாலும் அமைக்கப்பட்டு வருகிறது.

கொளத்தூர், சிம்சன் பகுதியில் மெட்ரோ இரயில் பாதை வருகின்ற இடத்தில் 200 மீட்டர் அளவிற்கு வரவுள்ள மழைநீர் கால்வாய்க்கு மாற்று ஏற்பாடாக இரண்டு பகுதிகளையும் இணைத்து ஒரு வளைவு ஏற்படுத்தி தடையில்லாமல் பெருமழை வந்தாலும், அதற்கேற்றாற்போல் 60 மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகளை ஒரு மாத காலத்திற்குள் முடித்திட துறை சார்பில் ஒப்பந்ததாரர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பருவமழையை முன்னிட்டு, ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால்களில் முழுவதுமாக தூர்வாரும் பணிகள் விரைவில் தொடங்கப்படும். ஒரு சில இடங்களில் தூர்வாரும் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

பருவமழையை எதிர்கொள்வதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் பிரதிநிதிகளான மாமன்ற உறுப்பினர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், மேயர், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள், அலுவலர்கள் அனைவரையும் களப்பணி மேற்கொள்ள களத்தில் முடுக்கிவிட்டிருக்கிறார்கள் எனத் தெரிவித்தார்.

சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தி

இராமேஸ்வரத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

தி.மு.க. - காங்கிரஸ் - மீனவர்கள் அமைப்பு பங்கேற்பு!

ராமேசுவரம், ஜூலை 20-

இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிக்க ஒன்றிய அரசை வலியுறுத்தி ராமேசுவரம் பேருந்து நிலையம் முன்பு அனைத்து மீனவர் கூட்டமைப்பு சார்பில் ஆர்ப்பாட்டம். திமுக,காங்கிரஸ் ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் கலந்து கொண்டனர்

இராமநாதபுரம் மாவட்டத்தில் மீன்பிடி தடைகாலம் நிறைவடைந்து மீன்பிடிக்க சென்ற இராமநாதபுரம், புதுக்கோட்டை, நாகை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த 74 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். 8 விசைப்படகுகள் மற்றும் நான்கு நாட்டுப்படகுகளை இலங்கை அரசு பறிமுதல் செய்துள்ளது.

ஏற்கனவே சிறை தண்டணை பெற்று சிறையில் உள்ள 6 மீனவர்களை விடுக்க வேண்டும். 2018 முதல் 2024 வரை இலங்கையில் 170 தமிழக மீன வர்களின் படகுகளை விடுவிக்க வேண்டும்.

சேதமடைந்து படகுகளுக்கு தமிழ்நாடு அரசு இழப்பீடு வழங்குவது போல் ஒன்றிய அரசும் இழப்பீடு வழங்கிட வேண்டும். இலங்கை நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட 15 விசைப்படகுகளை மீட்க ஒன்றிய அரசு அனுமதி வழங்கிட வேண்டும்.

தமிழ்நாடு அரசு சாலை வரியை நீக்கி 1,800 லிட்டர் டீசல் வழங்குவது போல ஒன்றிய அரசும் வழங்கிட வேண்டும்.

பாரம்பரிய கச்சத்தீவு பகுதியில் மீன்பிடிக்க உரிமையை பெற்றுத்தர வேண்டும் என்றும் ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க கோரி அனைத்து விசைப்படகு கூட்டமைப்பு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் காலை 10.30 மணிக்கு ராமேசுவரம் பேருந்து நிலையம் முன்பு நடைபெற்றது

இந்த ஆர்ப்பட்டத்தில், திமுக மாவட்ட கழக செயலாளரும் இராமநாதபுரம் சட்டப்பேரவை உறுப்பினர் காதர்பாட்ஷா முத்து ராமலிங்கம் தலைமையில் ஆயிரக்கனக்கானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்,

இதில் நாகை மாவட்ட கழக செயலாளர் கௌதமன் கலந்து கொண்டார்.

இதே போன்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பில் சட்ட மன்ற காங்கரஸ் கட்சித்தலைவர் எஸ். ராஜேஸ்குமார், கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த்,முன்னாள் அமைச்சர்கள் சத்திய மூர்த்தி, டாக்டர் சுந்தர் ராஜன், ஒன்றிய கவுன்சிலர் ரவிச்சந்திராம வன்னி மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அனைத்து நகர் மன்ற தலைவர்கள் ஒன்றிய தலைவர்கள் அனைத்து ஒன்றிய செயலாளர், நகர் செயலாளர்,மகளிர் அணியினர் மற்றும் அனைத்து அணி அமைப்பாளர்கள் உட்பட கூட்டணி கட்சி தலைவர்கள் உட்பட ஏராளமான திரளாக கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் பள்ளி கட்டிடங்களை காணொளி காட்சி வாயிலாகதிறந்து வைத்ததை தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவலாங்காடு ஒன்றியம் பூனிமாங்காடு ஊராட்சியில் 42.36 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட இரண்டு வகுப்பறை கட்டிடங்களை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் பள்ளி கட்டிடங்களை பார்வையிட்டு ஆசிரியர்களுக்கு மாணவ மாணவிகளுக்கு பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார் உடன் ஒன்றிய கழகச் செயலாளர் கூளூர் எம்.ராஜேந்திரன், ஊராட்சி மன்ற தலைவர் நற்குணம், மாவட்ட பிரதிநிதி கமலநாதன் நிர்வாகிகள் வெங்கடாஜலம், யுவராஜ், திலக், உள்படஆசிரியர்கள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

திருத்துறைப்பூண்டி ஒன்றிய முன்னாள் செயலாளர் எஸ்.பி.முருகதாஸ் இல்லத் திருமணம்!

பூண்டி.கலைவாணன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவாரூர்,ஜூலை20.

திருத்துறைப்பூண்டி ஒன்றிய முன்னாள் செயலாளர் மறைந்த எஸ்.பி.எம். என்கிற எஸ்.பி.முருகதாஸ் அவர்களின் மகனும், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளருமான மு.போஜராஜன் - ர.புவனேஸ்வரி ஆகியோரின் திருமண விழா திருத்துறைப்பூண்டியில் நடைபெற்றது. கழகத்தினர் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.

முன்னாள் ஒன்றிய செயலாளர் மறைந்த எஸ்.பி.எம். என்கிற எஸ்.பி.முருகதாஸ் அவர்களின் மகனும், மாவட்ட பிரதிநிதியும் , திருத்துறைப்பூண்டி அரசு வழக்கறிஞரும் நோட்டரியுமான எஸ்.பி.பாஸ்கர், ஒன்றியக்குழு உறுப்பினர் சரஸ்வதி - எஸ்.பி.ராமகிருஷ்ணன் ஆகியோர்களது அண்ணன் மகனுமான, திருவாரூர் மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் மு.போஜராஜன் -ர.புவனேஸ்வரி ஆகியோரது திருமண நிகழ்வில் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ.பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

இந்தத் திருமண நிகழ்வில் முன்னாள் அமைச்சர் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா.இளையராஜா, மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.எஸ்.பாண்டியன், ப.ஆடலரசன், நகர்மன்ற தலைவர் கவிதா பாண்டியன், ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர், மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், வழக்கறிஞர் எம்.ராமகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் ப.பிரகாஷ், வீ.எஸ்.ஆர். தேவதாஸ், இரா.மனோகரன், பால.ஞானவேல், கீழையூர் கோவிந்தராஜன் ,வடபூர் ராஜேந்திரன், வாரை எஸ். பிரகாஷ்,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் எம்.என். ராஜா,மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் குன்னலூர் அன்பழகன் , பொறியாளர் அணி அமைப்பாளர் இரா.கி.பிரபாகரன், தலைவர் ஆர்.வி.எல்.ரவிச்சந்திரன் , துணை அமைப்பாளர்கள் ஆர்.பிரபாகரன்,

ஸ்டாலின் மற்றும் சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள் சிக்கந்தர், வினோத்குமார், பாஸ்கர், ஜாகிர், ஓம்.சக்தி கண்ணன், பாலு, இளையராஜா, மற்றும் கழக மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் கிளைக்கழக, வார்டுகழக நிர்வாகிகள். கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

சங்கராபுரம் சட்டமன்றத் தொகுதி

தேவபாண்டலத்தில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்!

உதயசூரியன் எம்.எல்.ஏ. பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றார்!

கள்ளக்குறிச்சி சங்கராபுரம், ஜூலை 20.

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட தேவபாண்டலம் கிராமத்தில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் நடைபெற்றது,

முகாமிற்கு மாவட்ட வருவாய் அலுவலர் சத்ய நாராயணன் தலைமை தாங்கினார். ஒன்றிய குழு தலைவர் திலகவதி நாகராஜன், அட்மா குழு தலைவர் ஆறுமுகம்,சங்கராபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் ரோஜா ரமணி, பேரூர் கழக செயலாளர் துரைதாகப்பிள்ளை, சங்கராபுரம் வட்டாட்சியர் சசிகலா, சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் கோபாலகிருஷ்ணன், ஒன்றிய கவுன்சிலர் அம்பிகா வீரமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். அ.பாண்டலம் ஊராட்சி மன்ற தலைவர் பாப்பாத்தி நடராஜன் அனைவரையும் வரவேற்றார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதய சூரியன் மக்களுடன் முதல்வர் முதல்வர் திட்ட முகாம் குறித்து விளக்க உரையாற்றி அதன் பயன்களை எடுத்துக்கூறி பொதுமக்களிடம் மனுக்களை பெற்றார்.

சென்னை தென் மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை தென்மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம் (21.07.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் சி.பி.ராமசாமி சாலையில் உள்ள அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் அ.சந்திரசேகர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில், மயிலாப்பூர், தியாகராயநகர் பகுதிக்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், பகுதிச்செயலாளர்கள், வட்டச்செயலாளர்கள், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுகொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்க பணிகள்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ.

செயலாளர், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.